**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.9/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.5 |
| Name : | கிஷோர்குமார் |
| Father's Name/Husband Name: | குலோதுங்கன் |
| Village : | ஆடுதுரை |
| Taluk : | குன்னம் |
| Age : | 28/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.06.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( 1ம் எதிரி ஆஜர். எதிரிகள் 2, 3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது எஸ். ஆடுதுரையில் வசித்து தனியார் ஐ.டி துறையில் வேலை பார்த்து வருகிறேன். சாட்சி கௌரி என்னுடைய தாயார் ஆவார். எதிரிகளை தெரியும். கடந்த 13.03.2023ம் தேதியன்று திருமாந்துரையில் எனது சின்ன தாத்தா இறந்து 15 நாள் நினைவு துக்க நாளுக்கு நானும் எனது தாயார் சாட்சி கௌரி என்பவரும் இரு சக்கர வாகனத்தில் திட்டக்குடியிலிருந்து திருமாந்துரைக்கு சென்றோம். அந்த நிகழ்வில் கலந்து கொண்டு பின்னர் வீட்டிற்கு திரும்ப வருவதற்காக இராமலிங்க ஆசாரி காலி மனை அருகே காலை 10.45 மணியளவில் வரும்போது எதிரிகள் மூவரும் நாங்கள் வந்த இரு சக்கர வாகனத்தை வழிமறித்து, எனது தாயாரை 1ம் எதிரி குடும்ப பிரச்சனையை மனதில் வைத்துக் கொண்டுஆபாசமாக திட்டினார். அது பற்றி எனது தாயார் 1ம் எதிரியிடம் கேட்டபோது 1ம் எதிரி நெஞ்சில் கையால் குத்தி கீழே தள்ளிவிட்டார். மேலும் என் தாயார் அணிந்திருந்த ஜாக்கெட்டை கிழித்துவிட்டார்.

நான் அந்த நிகழ்வை தடுக்க சென்ற போது 2,3 எதிரிகள் என்னை பிடித்துக் கொண்டார்கள். அப்போது 1ம் எதிரி தன் கையில் வைத்திருந்த சாவிக்கொத்து கத்தியினால் என் தாயாரை குத்த முயன்றபோது எனது தாயார் நகர்ந்து விடவே எனது மோதிர விரல் முன்பகுதி மற்றும் வலது கை வளையல் அணியும் பகுதியில் காயம் பட்டது. இப்போது தப்பித்து விட்டீர்கள் எப்போது இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிவிட்டு சென்றார்கள். மயக்கம் வருவது போன்று உள்ளது என்று எனது தாயார் சொன்னதால் அவரை பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன். போலிசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். போலிசார் எனது வாக்குமூலத்தை டைப்ஃ செய்து கொண்டார்களா அல்லது கையில் எழுதிக் கொண்டார்களா என்றால் கையில் எழுதிக் கொண்டார்கள். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் விசாரணை செய்தார்கள், காவல் நிலையத்திற்கு அழைத்தும் விசாரணை செய்தார்கள். எனது வாக்குமூலத்தை போலிசார் எங்கு வைத்து எழுதிக் கொண்டார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து எழுதிக் கொண்டார்கள். போலிசார் என்னை போன் மூலம் அழைத்தார்களா அல்லது சம்மன் வைத்து அழைத்தார்களா என்றால் எனக்கு நினைவில்லை. அ.சா.1யிடம் இருந்து யார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் போலிசார் பெற்றார்கள். ஆண் போலிசாரா அல்லது பெண் போலிசாரா என்றால் எனக்கு சரியாக நினைவில்லை.

அ.சா.1 ஆன எனது அம்மா இரு சக்கர வாகனத்தில் என்னுடன் மருத்துவமனைக்கு வரும்போது மயக்க நிலையிலிருந்தாரா அல்லது சுயநினைவுடன் இருந்தாரா என்றால் பகுதி அளவு மயக்க நிலையில் இருந்தார். எத்தனை நாட்கள் அ.சா.1 மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்தார் என்றால் 4–5 நாட்கள். அந்த 4, 5 நாட்களில் போலிசார் எந்த நாளில் வந்து விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் எனக்கு நினைவில்லை. கிழிந்து போன ஆடைகளை போலிசாரிடம் நான் காண்பித்தேனா என்றால் எனக்கு தெரியவில்லை. அ.சா.1ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் மங்களமேடு காவல்

நிலையத்தை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். 1ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீதும், என் தாயார் அ.சா.1ன் மீதும் இந்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 3ம் எதிரியின் மனைவி கொளஞ்சிநாதன் கொடுத்த புகாரின் அடிப்படையில் என் மீது குற்ற வழக்கு குன்னம் நீதிமன்றத்தில் நடைபெறுகிறது என்றால் சரிதான்.

எனது சகோதரிக்கும் 1ம் எதிரிக்கும் இடையான விவாகரத்து வழக்கு பெரம்பலூர் குடும்ப நல நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரியும் நானும் வெவ்வேறு சமூகத்தினர் என்றால் சரிதான். எனக்கும் என் குடும்பத்தினருக்கும் தெரியாமல் 1ம் எதிரியும் எனது தங்கையும் காதல் திருமணம் செய்து கொண்டதால் அதை விரும்பாமல் ஊர் பஞ்சாயத்தின் மூலம் அவர்களை பிரிக்க முற்பட்டதற்கு 1ம் எதிரி மறுத்துவிட்டதால் அவர்கள் மீதுள்ள கோபத்தின் காரணமாக பொய் புகார் கொடுத்த அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற சம்பவம் நடந்த இடமானது 4 வழி பாதை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் காலை 10–10.30 மணி வரை பொது மக்கள் நடமாட்டமாகவும், வாகனங்கள் செல்லும் இடமாகவும் இருக்கும் என்றால் சரியல்ல. 1ம் எதிரி கொடுத்த வழக்கிலிருந்தும், 3ம் எதிரியின் மனைவி கொடுத்த வழக்கிலிருந்தும் தப்பிப்பதற்காக இவ்வழக்கில் எதிரிகளுக்கெதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1ற்கு ஏற்பட்ட காயமானது எதிரிகள் தாக்கியதால் ஏற்பட்ட காயம் இல்லை என்றால் சரியல்ல. இக்குற்ற சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.